**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,                                                                 தேதி: **18.09.2026**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பு

இந்தியாவில் தேங்காய் ஒரு முக்கியமான தோட்டப் பயிராகும். இது லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் வருமானப் பாதுகாப்பிற்கும் பங்களிப்பதோடு, பல்வேறு பதப்படுத்தும் தொழில்களுக்கும் ஆதரவளிக்கிறது. தேங்காய் உற்பத்தியில் இந்தியா உலகின் மிகப்பெரிய நாடாகத் திகழ்வதோடு மட்டுமல்லாமல் உலகளாவிய உற்பத்தியில் 30.37 சதவீதப் பங்களிப்பை வழங்குகிறது. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் (2024–2025) இறுதி மதிப்பீடுகளின்படி, இந்தியாவில் 21.90 லட்சம் ஹெக்டேர் சாகுபடி பரப்பிலிருந்து 139.70 லட்சம் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு (43.04 லட்சம் டன்கள்), கர்நாடகா (37.76 லட்சம் டன்கள்), கேரளம் (35.43 லட்சம் டன்கள்) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (11.94 லட்சம் டன்கள்) ஆகிய நான்கு தென்னிந்திய மாநிலங்கள் முக்கிய உற்பத்தியாளர்களாக உள்ளன, மேலும் அவை நாட்டின் தேங்காய் உற்பத்தியில் 92 சதவீதப் பங்களிப்பை வழங்குகின்றன.

தமிழ்நாட்டில், தென்னை விவசாய வாழ்வாதாரம், கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு பதப்படுத்தும் மற்றும் மதிப்புக்கூட்டும் தொழில்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. கடந்த 2024–2025 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 5.06 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்து சுமார் 43.04 லட்சம் டன் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்கள் மாநிலத்தின் முக்கிய தேங்காய் உற்பத்தியாளர்களாகத் திகழ்கின்றன.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு ஆனைமலைச் சந்தைகளில் நிலவிய கொப்பரையின் 25 ஆண்டுகால விலைத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து, ஒரு சந்தை ஆய்வை நடத்தியுள்ளது. இந்தப் பகுப்பாய்வு மற்றும் வர்த்தக ஆய்வின் முடிவுகளின்படி, அக்டோபர்'26–ல் நல்ல தரமான கொப்பரையின் விலை ஒரு கிலோவுக்கு சுமார் ரூ.145–150 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தக வட்டாரங்களின்படி, வரவிருக்கும் பண்டிகைக் காலங்கள் கொப்பரைக்கான தேவையை அதிகரிக்கும்

என்பதனால் விவசாயிகள் அதற்கேற்ப விற்பனை முடிவுகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள**:
உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு
வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி: 0422-2431405
மின்னஞ்சல்: tndemic@gmail.com

***மக்கள் தொடர்பு அலுவலர்***